இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

சனிக்கிழமை 28.03.2026

# திருநங்கையர் உரிமை காக்கப்பட வேண்டும்!

**எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல், எதை எல்லாம் செய்யக் கூடாதோ அதைச் செய்து கொண்டு இருக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு. நாடே சிலிண்டர் தட்டுப்பாட்டால் இருக்கிறது. அதைப் பற்றிய கவலையோ, அதைச் சரி செய்வதற்கான முயற்சியோ கவலையோ பிரதமர் மோடிக்கு இல்லை. ‘கொரோனா காலத்துக்குத் தயார் ஆகுங்கள்’ என்று சொல்லிவிட்டு கைகழுவத் தயாராகி வருகிறார். இன்னொரு பக்கத்தில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கி திசை திருப்பிக் கொண்டு இருக்கிறார். அதில் ஒன்றுதான் ‘திருநங்கையர் திருத்த மசோதா’ ஆகும்.**

‘‘திருநங்கையர் திருத்த மசோதாவை நிறுத்தி வைக்க வேண்டும். திருநங்கையர் திருத்த மசோதா விவகாரத்தில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். திருநங்கையர் திருத்த சட்ட மசோதாவை நிறுத்தி வைத்து ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும். ‘திருநங்கைகள் சட்டம், 2019’இல் முன்மொழியப்பட்டுள்ள திருத்தங்களை, வலுக்கட்டாயமாகச் செயல்படுத்தக் கூடாது. திருத்தச் சட்டத்தால் பாதிக்கப்பட இருக்கும் மக்களின் கருத்துகளைக் கேட்காமல் திருத்தங்களை மேற்கொள்ளக் கூடாது. ஒன்றிய அரசின் திருத்தத்தை திருநங்கையர்கள் எதிர்க்கும்போது அந்தச் சட்டத்தை ஒன்றிய அரசு திணிக்கக் கூடாது” என்று மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடுமையான கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்கள். அந்தளவுக்கு மோசமான சட்டத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றி உள்ளது.

**இந்த மசோதாவை ஆதரித்து பாதம் தாங்கி பழனிசாமி கட்சியைச் சேர்ந்த தம்பிதுரை பேசி இருக்கிறார். பா.ஜ.க.வுக்கு கூஜா தூக்குவதில் மட்டுமல்ல; மக்களுக்குத் துரோகம் செய்வதிலும் முந்தி நிற்பது அ.தி.மு.க.தான்.**

யாருடைய எதிர்ப்பைப் பற்றியும் பா.ஜ.க.வுக்கு கவலை இல்லை. அரசியல் கட்சிகளின் எதிர்ப்பு மட்டுமல்ல; சமூக அக்கறையுள்ள அனைவருமே எதிர்ப்பைப் பதிவு செய்து வருகிறார்கள். ‘திருநங்கைகள் திருத்த மசோதா 2026’க்கு எதிர்ப்புத் தெரிவித்து, தேசிய திருநங்கைகள் மன்றத்தின் உறுப்பினர்களான தெற்கு மண்டலப் பிரதிநிதி கல்கி சுப்பிரமணியமும், வடக்கு மண்டலப் பிரதிநிதி ரிதுபர்ணா நியோக்கும் தங்கள் பதவியை விட்டு விலகி இருக்கிறார்கள். இந்தத் திருத்த மசோதா, திருநங்கைகள் தங்கள் பாலினத்தை தாங்களே சுயமாக அடையாளம் காணும் அடிப்படை உரிமையைப் பறிப்பதாக அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மசோதாவை இறுதி செய்வதற்கு முன்பு சமூகப் பிரதிநிதிகளிடமோ அல்லது தங்கள் மன்றத்திடமோ உரிய ஆலோசனைகள் எதுவும் நடத்தப்படவில்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். ‘இந்தச் சட்டத் திருத்தம் திருநங்கைகளின் கண்ணியத்திற்கு எதிரானது என்றும் அடிப்படை உரிமைகளில் இது ஒரு ‘பின்னோக்கிய அடி’ என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

திருநங்கைகள் உரிமைகள் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஆலோசனைக் குழு, ஒன்றிய சமூக நீதித்துறை அமைச்சர் வீரேந்திர குமாருக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளது. அதில், ‘திருநங்கைகள் (உரிமைகள் பாதுகாப்பு) திருத்தச் சட்ட மசோதா 2026’ஐத் திரும்பப் பெறுமாறு கோரிக்கை விடுத்தது. ஆனால் அதே நாளில்தான் மக்களவையில் இந்த சர்ச்சைக்குரிய சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு உள்ளது.

‘Trans Amendment Bill 2026’ என்பது மக்களவையிலும் மாநிலங்களவையிலும் பலத்த எதிர்ப்புகளுக்கு இடையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இது வரை சட்டத்தால் தரப்பட்ட உரிமையை இம்மசோதா பறிப்பதாக திருநர், திருநங்கைகள் குற்றம் சாட்டுகிறார்கள். 2019 ஆம் ஆண்டைய சட்டத்தின் படி ஒருவர் மூன்றாம் பாலினத்தவராக இருந்தால், தாங்களாகவே மூன்றாம் பாலினத்தவர் என்று தன்னை அடையாளப்படுத்திக் கொள்ள முடியும். இந்தச் சட்டத் திருத்தத்தில் இந்த உரிமை நீக்கப்படுகிறது. இனி, அரசு மூன்றாவது பாலினத்தைச் சரிபார்த்து உறுதிப்படுத்தி, அதற்கு மாவட்ட ஆட்சியரிடம் இருந்து ஒப்புதல் பெற்ற பின்னரே சம்பந்தப்பட்ட நபரை மூன்றாவது பாலினத்தைச் சேர்ந்தவராக எடுத்துக்கொள்ள முடியும். ‘‘திருநங்கைகள் அவர்களது தன்மையை மருத்துவக் கவுன்சில் முன்பும் மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பும் நிரூபிக்க வேண்டும்” என்பது கடுமையான கண்டனத்துக்கு உரியது ஆகும்.

2019 சட்டத்தில் இருந்த “selfidentification” முறையை நீக்கி, ‘மருத்துவக் குழு சான்றிதழ் அவசியம்’ என மாற்றியிருப்பது மிகக் கடுமையாக எதிர்க்கப்பட வேண்டியது ஆகும்.

2014 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய நல்சா (NALSA) தீர்ப்பின் அடிப்படையில் திருநங்கைகள் எப்படி இருக்க வேண்டும், அவர்களுக்கு எத்தகைய சட்டத்திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் என்று அழகாகத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது. அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் 2019ல் ஒன்றிய அரசு ஒரு மசோதாவை நிறைவேற்றியது. அதிலும் சில முன்னோக்கிய மாறுதல்கள் வேண்டும் என்று கோரிக்கை வைத்து வந்த சூழலில், இன்னும் பின்னோக்கிப் போக வைத்துள்ளது பா.ஜ.க.வின் மசோதா.

“எங்களைக் குறிப்பிட அரவாணி, யூனக் என்ற வார்த்தைகளை ஒன்றிய அரசு வழங்கியுள்ளது. ‘யூனக்’ என்ற சொல்லின் பொருள் ‘விதையடிக்கப்பட்ட ஆண்’ என்பதாகும். ஆகையால் அந்தச் சொல்லையும் இந்த திருத்தச் சட்டத்திலிருந்து நீக்க வேண்டும். வீட்டில் இருந்து விரட்டியடிக்கப்படும் எங்களைப் பாதுகாக்கும் வேலைகளைச் செய்வோருக்கு தண்டனை வழங்கும் விதமாக சட்டங்கள் உள்ளன. அவற்றையும் நீக்க வேண்டும்” என்று திருநங்கையர் கோரிக்கை வைத்துள்ளார்கள்.

**கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் ஒதுக்கீடு, வயது தளர்வு மற்றும் மதிப்பெண் தளர்வு, கல்வி மற்றும் அரசு வேலை வாய்ப்புகளுக்கான அணுகல் எளிமையாக்கல், வீட்டு வசதித் திட்டங்கள், பொதுப் போக்குவரத்து, தரமான மற்றும் அணுகக்கூடிய சுகாதாரச் சேவைகள், ஓய்வூதியம் மற்றும் சமூகப் பாதுகாப்பு உள்ளிட்ட அவர்களது எந்தக் கோரிக்கையையும் நிறைவேற்றாமல், அவர்களது அடையாளத்தை நிரூபிப்பதுதான் முக்கியமானது என்ற சிக்கலை உருவாக்கி இருக்கிறது பா.ஜ.க. அரசு.**

திருநங்கையர், நம்பிகள், மூன்றாம் பாலினத்தவர் (இன்னும் பல்வேறு பெயர்களில்...) என்று அழைக்கப்படுபவர்களின் உரிமைகளைக் காக்க வேண்டும். குரலற்ற அவர்களின் குரல்வளையை நெரிக்கும் செயலை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறுத்த வேண்டும்! நிறைவேற்றப்பட்ட மசோதாவை நிறுத்தி வைக்க வேண்டும்!

## கழகத் தலைவர் – முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# அ.ம.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி தலைமையில் தஞ்சை மாவட்ட அ.ம.மு.க. நிர்வாகிகள் கழகத்தில் இணைந்தனர்!



சென்னை, மார்ச் 28-

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் தஞ்சை மத்திய மாவட்டம் அ.ம.மு.க.வின் துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி தலைமையில் தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏழுப்பட்டி ஜி.பாலு, அம்மாபேட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.கோவிந்தசாமி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலாளர் என்.ஏ.பட்டாபிராமன், சரத்குமார், மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் சண்முகசுந்தரம், மாவட்ட ஐடி விங் இணைச் செயலாளர் சி.புருஷோத்தமன், துணைச் செயலாளர் அன்பன்தமிழ், வழக்கறிஞர் அணி எஸ்.பிரபு, ஆசிரியர் கே.சந்திரமோகன், எஸ்.பாலமுருகன் ஆகியோர் கழகத்தில் இணைந்தனர்.

முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (26.3.2026) மாலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், தஞ்சை மத்திய மாவட்டம், அ.ம.மு.க. துணைப் பொதுச்செயலாளர் எம்.ரெங்கசாமி அவர்கள் தலைமையில், தஞ்சை தெற்கு மாவட்டச் செயலாளர் ஏழுப்பட்டி ஜி.பாலு, அம்மாபேட்டை தெற்கு ஒன்றியச் செயலாளர் எம்.கோவிந்தசாமி, மாவட்ட எம்ஜிஆர் இளைஞர் அணிச் செயலாளர் என்.ஏ.பட்டாபிராமன், சரத்குமார், மாவட்ட இலக்கிய அணி இணைச் செயலாளர் சண்முகசுந்தரம், மாவட்ட ஐடி விங் இணைச் செயலாளர் சி.புருஷோத்தமன் துணைச் செயலாளர் அன்பன்தமிழ், வழக்கறிஞர் அணி எஸ்.பிரபு, ஆசிரியர் கே.சந்திரமோகன், எஸ்.பாலமுருகன் ஆகியோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், துணைப் பொதுச்செயலாளர் மு.பெ.சாமிநாதன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை.சந்திரசேகரன், எம்.எல்.ஏ., தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை அன்பழகன், எம்.எல்.ஏ., தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல், தஞ்சை நாடாளுமன்ற உறுப்பினர் முரசொலி, பேராவூரணி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் என்.அசோக்குமார், ஆகியோர் உடனிருந்தார்.

## தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக –

# அமித்ஷா கொடுக்கும் ‘ஸ்கிரிப்ட்’களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார் எடப்பாடி!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேட்டி!

**சென்னை, மார்ச் 28–**

**தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக – அமித்ஷா கொடுக்கும் ‘ஸ்கிரிப்ட்’களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார் எடப்பாடி பழனிசாமி என்று அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் குற்றம் சாட்டினார்.**

அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அ.தி.மு.க. கூட்டணியின் தலைவராகச் சொல்லப்படுகின்ற எடப்பாடி பழனிசாமி, தனக்கு இருக்கும் சிக்கல்களை மறைப்பதற்காக தி.மு.க. கூட்டணியைத் தேவையற்று விமர்சனம் செய்து வருகிறார்.

ஒருகாலத்தில் வட இந்தியத் தலைவர்கள் அ.தி.மு.க. தலைவரைச் சந்திப்பதற்காக அவர் வீட்டு வாசற்படியில் வந்து நின்ற சூழல் இருந்தது. ஆனால், இன்று ஒவ்வொரு முடிவை எடுப்பதற்கும் டெல்லிக்குச் சென்று வரும் நிலைக்கு அ.தி.மு.க.வைத் தரம் தாழ்த்திய எடப்பாடி பழனிசாமி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலினையும், தி.மு.க. கூட்டணிக் கட்சித் தலைவர்களையும் விமர்சிப்பது தேவையற்றது.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தேர்தல் களத்தில் பல்வேறு சவால்களைச் சந்தித்துப் படிப்படியாக வளர்ந்த கட்சி. அதன் தலைவர் எழுச்சித் தமிழர் தொல்.திருமாவளவன், ஒவ்வொரு தேர்தலிலும் தனது வெற்றியை நிரூபித்து, தி.மு.க. தலைமையால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறார். நல்லுறவோடு இருக்கும் இக்கூட்டணியைப் பழனிசாமி விமர்சனம் செய்கிறார்.

**பா.ஜ.க.வுக்கு பெரிய இடம் கொடுத்த பழனிசாமி!**

அவருடைய கூட்டணியில் பா.ஜ.க.விற்கு கடந்த முறையை விட அதிக இடங்களைக் கொடுத்திருப்பது மட்டுமல்லாமல், பா.ஜ.க.வின் தாமரைச் சின்னத்தில் இன்னும் கூடுதல் இடங்கள் போட்டியிடும் நிலை உருவாகியுள்ளது. பா.ஜ.க. விற்கு 27 இடங்கள் ஒதுக்கப்பட்ட நிலையில், த.மா.கா., இந்திய ஜனநாயகக் கட்சி, தமிழக மக்கள் முன்னேற்றக் கழகம், புதிய நீதிக் கட்சி போன்ற கட்சிகளும் தாமரைச் சின்னத்திலேயே போட்டியிடுகின்றன. தமிழ்நாட்டில் நோட்டாவிற்கு கீழே இருந்த தாமரைக்கு, எடப்பாடி பழனிசாமி ஒரு மிகப்பெரிய இடத்தைக் கொடுத்திருக்கிறார்.

அ.தி.மு.க. தொண்டர்களுடைய சுயமரியாதையைக் காக்கும் வகையில் செயல்படுவதுதான் அந்த இயக்கத்திற்குச் செய்யும் நற்பணியாகும். அதை விடுத்து அவர் தி.மு.க. கூட்டணியைக் கூறிக்கொண்டிருக்கிறார். அவர் என்னதான் மேக்கப் போட்டுக் கொண்டு மறைக்க நினைத்தாலும், அவருடைய ஒவ்வொரு அறிவிப்பிற்குப் பின்னாலும் அமித்ஷா இருக்கிறார் என்பது கிராமத்து மக்களுக்கும் தெரிந்த உண்மையாகவே இருக்கிறது.

அ.தி.மு.க. என்பதை அடிமை தி.மு.க. என்று பெயர் மாற்றும் அளவிற்கு எடப்பாடி பழனிசாமி கொண்டு சென்றுவிட்டார் என்று அக்கட்சியினரே குற்றம் சாட்டுகின்றனர். அமித்ஷா கொடுக்கும் ஸ்கிரிப்ட்களை மாற்றாமல் அப்படியே படிக்கிறார். கூட்டணிக் கட்சிகளுக்குக் கொடுக்கும் இடங்களை அவர் சொன்னாலும், அ.தி.மு.க. போட்டியிடும் இடங்களைக் கூட மற்றவர்கள் கணக்கிட்டுத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையில்தான் அவருடைய ஒவ்வொரு முடிவும் இருக்கிறது.



மோடியா? லேடியா? என்று கேட்டு பா.ஜ.க.விற்குச் சவால் விடுத்தவர் ஜெயலலிதா அம்மையார். ஆனால் இன்றைக்கு மோடியே எல்லாம் என்று கூறி அம்மையாரின் ஆன்மாவையே சாகடிக்கும் அளவிற்கு எடப்பாடி பழனிசாமி சென்றுவிட்டார். டெல்லி பா.ஜ.க.விற்கு ஒரு போதும் அடிபணிய மாட்டோம் என்று சொல்லிக்கொண்டே, மீண்டும் மீண்டும் அவர் அடிபணிந்து கொண்டிருக்கிறார்.

இந்த நேரத்தில்தான், தமிழ்நாட்டு மக்கள் தமிழ்நாடு ‘அவுட் ஆப் கண்ட்ரோல்’ என்று டெல்லிக்கு உரத்த குரலில் சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தலைமையில் மக்கள் ஒன்றிணைந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்தத் தேர்தல் மிகப்பெரிய வெற்றியைத் திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டணிக்குப் பெற்றுத்தரும். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் திராவிட மாடல் 2.0 ஆட்சி மீண்டும் மலர இருக்கிறது. இந்த மகத்தான வெற்றியை எட்டுவதற்காக நிலங்களை முதலமைச்சர் முறைப்படுத்தத் திட்டமிட்டுத் தொடங்கியிருக்கின்றார்.

ஒவ்வொரு கூட்டணிக் கட்சியோடும் முறையாகப் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய மரியாதை அளிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, மூன்று முறை பேச வேண்டிய சூழல் வந்தாலும், மனம் உவந்து பேசி ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அதேபோல எந்தெந்தத் தொகுதிகளில் போட்டியிடுவது என்பதையும் தி.மு.க. சார்பில் அமைக்கப்பட்ட குழுவினர் கூட்டணிக் கட்சிகளோடு பேசி ஒருமனதாக முடிவெடுக்கப்படும்.

மாறாக, என்.டி.ஏ. கூட்டணி என்பது டெல்லியில் அமித்ஷாவின் கட்டளைக்கு ஏற்ப அமைக்கப்பட்டிருக்கிறது. சுயமரியாதையோடும் தன்மானத்தோடும் இயங்கும் தி.மு.க. கூட்டணி மகத்தான வெற்றி பெறும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராகப் பொறுப்பேற்பார்கள்.


காங்கிரஸ் மற்றும் தே.மு.தி.க.வின் பாரம்பரியம் மற்றும் செல்வாக்கைக் கருதி இடங்கள் ஒதுக்கப்பட்டதை வி.சி.க. தலைவர் திருமாவளவன் தெளிவாக ஏற்றுக்கொண்டதாகவும், இதில் எந்த மனவருத்தமும் இல்லை என்றும் குறிப்பிட்டுள்ளார். அதே சமயம், சீட் கிடைக்காத விரக்தியில் வேல்முருகன் முன்வைக்கும் புகார்கள் தவறானவை. தி.மு.க. ஆட்சியில் அதிகாரம் ஓரிடத்தில் குவியவில்லை என்பதற்குத் தொலைதூர மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரான நானே சாட்சி. அமைச்சர்கள் அனைவரும் சுதந்திரமாகவும் கூட்டுப் பொறுப்போடும் செயல்படுகிறோம்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் கூறினார்.

## தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ்

# தாய்மார்களின் ஊட்டச்சத்தை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் – தே.மலையரசன் கேள்வி!



புதுடெல்லி, மார்ச் 28-

கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் எழுப்பிய கேள்வி பின்வருமாறு :-

தமிழ்நாட்டில் ஊட்டச்சத்து இயக்கத்தின் கீழ் குழந்தைகள், வளரிளம் பெண்கள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்து நிலையை மேம்படுத்த ஒன்றிய அரசு எடுக்கப்பட்ட முயற்சிகள் என்ன?

நிர்ணயிக்கப்பட்ட நோக்கத்தின் கீழ் வலுப்படுத்தப்பட்ட மற்றும் மேம்படுத்தப்பட்ட அங்கன்வாடி மையங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

ஊட்டச்சத்துக் குறைபாடு விகிதங்கள், சேவை வழங்கல் மற்றும் பயனாளிகளின் திருப்தியைக் கண்காணிக்க செயல்படுத்தப்படும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்து சமூகங்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன?

சிறந்த விளைவுகளுக்காக ஊட்டச்சத்து இயக்கத்தை சுகாதாரம், தூய்மை மற்றும் கல்வித் திட்டத்துடன் ஒருங்கிணைக்க முன்மொழியப்பட்ட முயற்சிகளின் விவரங்கள் என்ன?

இவ்வாறு நாடாளுமன்றத்தில் தே.மலையரசன் கேள்வி எழுப்பினார்.